**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**COS No. : 141/2024**

**DW1 – திரு. சேகர் த/பெ. சீதாபதி**

**29.04.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

**நேரம் 15.00 மணி**

நான் Chennai, City Civil நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமான அனைத்து விவரங்களையும் இந்த வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். வாதி நிறுவனம் 17-12-2018 அன்று அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. நேரில் சென்று பேசிவிட்டேன். 7 நாட்களுக்குள் ரூபாய் 17,60,000/- திரும்ப செலுத்த வேண்டும் என்று கூறுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் பணத்தை கட்டாத பட்சத்தில் Late Payment கட்ட வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்றால் அப்படி தான் எல்லோருக்கும் அனுப்புவார்கள். அதன்பிறகு 12-04-2019 ல் வாதி நிறுவனம் ரூபாய் 30,95,000/- ஐ கேட்டு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். நான் அனைத்து அறிவிப்புகளையும் எடுத்து சென்று ரூபாய் 3 லட்சம் கட்டிவிட்டு வந்தேன். மேற்படி அறிவிப்பிலும் 7 நாட்களுக்குள் ரூபாய் 30,95,000/- திரும்ப செலுத்த வேண்டும் என்று அதை கட்டாத பட்சத்தில் Late Payment கட்ட வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி நிறுவனத்திற்கு ரூபாய் 10 லட்சம் கொடுத்ததற்கான இமெயில் அல்லது கடிதம் ஏதாவது வாதி நிறுவனத்திற்கு கொடுத்தேனா நான் நேரில் சென்று பணத்தை செலுத்தியதால் கடிதம் அல்லது இமெயில் எதுவும் கொடுக்கவில்லை. லோன் கார்டு எடுத்து சென்று அதில் Entry போட்டு கொடுத்தார்கள். என்னுடைய

லாரியை விற்று ரூபாய் 10 லட்சத்தை எடுத்துக் கொண்டார்கள். வாதி நிறுவனம் நான் கொடுத்த பணத்தை அட்ஜட்ஸ் செய்துகொள்கிறேன் என கடிதம் அனுப்பினார்களா என்றால் இல்லை. அந்த Loan கார்டிலும் APC Finance என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.1ல் Loan Card ல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தமாக கட்டவேண்டிய பணம் ரூபாய் 98,25,000/- ஆகும். நான் APC Finance ல் லாரி வாங்குவதற்காக லோன் வாங்கினேன் என்றால் சரிதான். அதற்கும் 30 தவணைகள் தான் குறிப்பிட்டிருந்தார்கள் என்றால் சரிதான். லாரி வாங்கியதற்கான Loan Card ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை செட்டில்மெண்ட் செய்துவிட்டேன். பி.வா.த.சா.ஆ.2 என்னுடைய வங்கி கணக்கின் படி ரூபாய் 3,45,000/- ADC Finance நிறுவனத்திற்கு கொடுத்தது போல குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் APC Finance நிறுவனத்திற்கு தான் ரூபாய் 3,45,000/- காசோலை கொடுத்தேன். ADC Finance நிறுவனத்திற்கும் வாதி நிறுவனத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றாலும் APC Finance நிறுவனத்திற்கு ரூபாய் 3,45,000/- கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பணத்தை வாங்கிவிட்டு பணத்தை திரும்ப செலுத்தாமல் இருப்பதற்காக TN Prohibition of Exorbitant Interst Act ன் கீழ் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் கூறிய படி 9 சதவிகித வட்டி என அடமான பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் 7 சதவிகித வட்டி தொகை என அடமான பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு அடமான பத்திரத்தை அடிப்படையில் தான் வாதி நிறுவனம் வழக்கு தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.1 Loan Card கடைசி தவணை தேதி 10-01-2020 என்றால் சரிதான். கொரோனா காலம் அதன் பின்னர் தான் இந்தியாவில் ஆரம்பித்தது என்றால் சரிதான். ஆனால் நான் கொரோனா காரணத்தினால் தான் பணம் செலுத்தமுடியவில்லை என்று தவறாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.3, பி.வா.த.சா.ஆ.4

அறிவிப்புகளில் ரூபாய் 10 லட்சம் மற்றும் ரூபாய் 3,45,000/- பற்றி எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். APC FInance நிறுவனத்தின் ஓனர் எழுதி ஆபீஸில் கொடுத்தவுடன் கிளார்க் லோன் கார்டில் பதிவு செய்தார். நான் மேற்கூறிய விவரத்தை என்னுடைய எதிர் உரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 5 ஆவது பக்கத்தில் ஒரு அட்டவனை போடப்பட்டுள்ளது அதில் 2 மற்றும் 6 வரிசை எண்ணில் பணம் செலுத்திய தேதி என தேதி குறிப்பிட்டு அதில் வாதி மறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 2017 ல் லோன் வாங்கி 10-12-2021 வரை எந்த வித அறிவிப்பும், பதில் அறிவிப்பும் வாதி நிறுவனத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் ரூபாய் 44,05,000/- பணம் செலுத்தியதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கு விவரம் மற்றும் லோன் கார்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.த.சா.ஆ.2 ல் வாதி நிறுவனத்திற்கு பணம் செலுத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதால் நான் வாதி நிறுவனத்திற்கு எந்த பணமும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் என்னுடைய வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2017 முதல் கடைசி தவணை கட்டியதற்கான என்னுடைய வங்கி கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என்னுடைய நிறுவனம் 2011 ல் மூடப்பட்டு 2017 ல் அதே நிறுவனத்தின் பேரில் வாதி நிறுவனத்திடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் நிறுவனத்தின் பேரில் அக்கவுண்ட் இருந்தது, நிலத்தை அடமானம் வைத்து தான் கடன் வாங்கினேன். நான் நிறுவனத்தை நடத்திக்கொண்டு என்னுடைய நிறுவனத்தின் வங்கி கணக்கு நடைமுறையில் இருந்த போது தான் நிறுவனத்தின் பெயரில் அடமான கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நிறுவனத்தை அப்போது நான் நடத்தவில்லை. வங்கி கணக்கு நடைமுறையில்

இருந்தது. நான் அடமான கடனை என் நிறுவனத்தின் வணிக பயன்பாட்டிற்காக கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. வணிக வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தற்போது கடன் வாங்கிய போது நிறுவனம் நடத்தவில்லை மூடப்பட்டுவிட்டது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே நிலத்தை வைத்து வேறு எங்காவது கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. பத்திரம் வாதி நிறுவனத்திடம் இருந்தது. நான் இதே சொத்தை வைத்து ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி நிறுவனத்திடம் கடன் பெற்றேன் என்றால் அந்த கடனை கட்டி முடித்துவிட்டேன். Closure Letter கொடுத்துவிட்டார்கள். Arb Case போட்டு என்னுடைய சொத்து Attachment ஆனது என்றால் அந்த கடனில் கடன் வாங்கியவர்காக நான் Gurantor ஆக கையொப்பமிட்டேன். அதில் Attachment ஆனது தற்போது அவர் பணத்தை கட்டிவிட்டார். இது 25-03-2025 ல் வில்லங்க சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முதல் பெயர் சேகர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க சான்றிதழ் **வா.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த லோன் Closure Letter ஐ தேவைப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 10-12-2021 அன்று அனுப்பிய அறிவிப்பில் காசோலை பற்றியோ, காசோலை திருப்பப்பட்டது பற்றியோ காசோலை அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தது பற்றியோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் தவணை தேதி ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் பணத்தை திரும்ப செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த அனைத்து காசோலைகளும் 10 ஆம் தேதிக்கு பிந்தய தேதிகளில் தான் லோன் கார்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முன்னதாகவே காசோலையை கொடுத்திருந்தால் அடமான பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தபடி 10 ஆம் தேதிக்கு முன்பதாக வங்கியில் செலுத்தி பணத்தை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. 10 ஆம் தேதி போட்டு தான் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் OP

2/2022 தேதி 15-04-2024 தேதியிட்ட கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை சாட்சியம் என்னுடையது தான். மேற்படி என்னுடைய கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை சாட்சியம் **வா.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி நிறுவனம் என் மீது தாக்கல் செய்த குற்றவியல் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் திரும்ப கொடுத்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி நிறுவனம் அடமான பத்திரத்தின் அடிப்படையில் தான் பணத்தை திரும்பகேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதில் கூறப்பட்டுள்ள வட்டி விகிதத்தின் அடிப்படையில் தான் நான் கடனை திரும்ப செலுத்தவேண்டும் என்றாலும் நான் பணத்தை திரும்ப செலுத்தாத பட்சத்தில் வழக்கு சொத்தை ஏலத்திற்கு கொண்டுவர தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக மாற்றி மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நேரம் 15.45 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.